குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy

# நிகழினி இதழ்

## NIGAZHINI MAGAZINE

பதிப்பாசிரியர் : திருமதி. சந்திரா ஸ்ரீதர்

இணை பதிப்பாசிரியர்:
திருமதி. திவ்யா சங்கரசுப்பிரமணியன்

பதிப்பு : 13/2026/1






குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy

## குறிஞ்சி உறுதி மொழி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல்
தொன்மையான நம் தமிழ் மொழி,
தமிழ் கலாச்சாரம் மற்றும் தமிழ்ச் சமுதாயத்தில்
நானும் ஒரு அங்கமாக இருப்பதில்
பெருமைக் கொள்கிறேன்!
தமிழில் பேசவும்,
எழுதவும், படிக்கவும்
நான் என்றும்
முயற்சி செய்வேன் என்று
உறுதி எடுக்கிறேன்!
தமிழை வாசிப்போம்!
நேசிப்போம்!
சுவாசிப்போம்!
வணக்கம்!

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் பக்கம் | 2 |
| 2 | இணை ஆசிரியர் பக்கம் | 3 |
| 3 | திருக்குறள் | 4 |
| 4 | கண்ணதாசன் காவிய வரிகள் | 4 |
| 5 | உணவே மருந்து | 5 |
| 6 | காதல் – தமிழர் பண்பாடு | 7 |
| 7 | சத்தமில்லா ஓசைகள் | 10 |
| 8 | வார்த்திகம் | 10 |
| 9 | கவிதைகள் சொல்லவா? | 11 |
| 10 | புதுமைப்பெண் பாகம் - 5 | 12 |
| 11 | வானவில் வண்ணங்கள் | 13 |
| 12 | வண்ணமயமான பொங்கல் | 14 |
| 13 | அருள்மிகு முருகன் (முருகப்பெருமான்) | 14 |
| 14 | மைந்தனின் ஆனந்த பொங்கல் | 15 |
| 15 | பொங்கல் ஓவியம் | 15 |
| 16 | குழந்தை ஓவியம் | 16 |
| 17 | கைவினையில் பொங்கல் | 16 |
| 18 | பாரதியார் ஓவியம் | 17 |
| 19 | கோலம் | 17 |
| 20 | வீட்டுப் பொங்கல் | 17 |

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 21 | நிலத்தில் பூத்த கவிதை - அன்னை போட்ட கோலம் | 18 |
| 22 | பொங்கலோ பொங்கல் | 18 |
| 23 | கோலம் - சிறப்புகள் | 19 |
| 24 | குறிஞ்சி முத்தமிழ் சங்கத்தின் மாபெரும் இசை பெருவிழா | 22 |
| 25 | வண்ணம் தீட்டி மகிழ்க | 24 |
| 26 | மீன்களை உரிய தொட்டியில் சேர்ப்பிக்க | 25 |
| 27 | விடுபட்ட இடங்களைத் தகுந்த குறில் , நெடில் வார்த்தைகளால் நிரப்புக | 25 |

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy

**Editor : Mrs.Chandra Srithar**
**ஆசிரியர் :திருமதி. சந்திரா ஸ்ரீதர்**

**Co-editor : Mrs. Dhivya Sankarasubramanian**
**இணை ஆசிரியர்:**
**திருமதி. திவ்யா சங்கரசுப்பிரமணியன்**

ஆசிரியர் இலாகா விளம்பரம் முகவரி
5252 E 130th circle
Thornton
Colorado 80241,USA.
kurinjimuthamizhsangam@gmail.com

**குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்**, **"நிகழினி இதழ்"** தமிழ் சமூகத்திற்காக டிஜிட்டல் வடிவில் வெளியிடுவதில் பெருமை அடைகிறது.

நிகழினி என்றால் மங்கா அறிவொளி பொருந்தியவள், பிரகாசமாக சொலிப்பவள் என்று பொருள்.

இந்த இதழ் தொன்மையான நம் தமிழ்மொழியை நேசிக்கும் மக்களின் சுயப்படைப்புகள் மற்றும் நிர்வகிக்கப்பட்ட படைப்புகளை உங்கள் வாசிப்புக்காகக் கொண்டு வரும்.

இந்த இதழில் நிர்வகிக்கப்பட்டப் படைப்புகள் அனைத்தும் வாசகர்கள் நல்லத் தமிழ் படிக்கும் நோக்கத்தில் இடம் பெறுகின்றன.

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அதை எழுதியவர்களின் சொந்தக் கருத்துகளே!

எந்தவொரு நகல் உரிமைச் சிக்கலுக்கும் உண்மைத்தன்மைக்கும் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் பொறுப்பல்ல.

# ஆசிரியர் பக்கம்

## தான தர்மம்

ஒரு வீட்டு வாசலில் யாசகன் ஒருவன் தர்மம் கேட்டு நின்றிருந்தான்.
"அம்மா... தாயே... ஏதாவது தர்மம் பண்ணுங்கம்மா !"
அந்த வீட்டு பெண்மணி வெளியே வந்து பார்த்தாள்.
அங்கே வீதியில் விளையாடிக் கொண்டு இருந்த, தனது ஐந்து வயது மகளை அழைத்து, அவளது கைகளால் அரிசியை அள்ளி கொடுத்து, யாசகனின் பாத்திரத்தில் இட சொன்னாள்.
பெற்றுக் கொண்ட யாசகனும், பக்கத்து வீட்டுக்கு சென்று பிச்சை கேட்க சென்றான்.
அந்த பெண்மணியும் விளையாடிக் கொண்டிருந்த தனது மகளை கூப்பிட்டு, அவளது கையால் அரிசியை அள்ளி யாசகனுக்கு பிச்சை அளிக்க சொன்னாள்.
காலங்கள் உருண்டோடின...
இரண்டு பெண்மணிகளுக்கும் வயது முதிர்ந்து போனது. இரு சிறுமிகளும் வளர்ந்து பெரியவர்களாகினர்...
அவரவர்கள் தம் தாய் காட்டிய வழியில் தர்மங்களும் தொடர்ந்தன...
ஒரு நாள், அந்த முதிய பெண்மணிகள் இருவருமே இறந்து வானுலகம் சென்றனர்.
அங்கே, அந்த முதல் வீட்டு பெண்மணிக்கு சொர்க்கத்தில் இடம் கிடைத்தது. மற்றவளுக்கோ அதற்கு கீழான இடமே கிடைத்தது.
உடனே, அவள் இறைவனிடம் பதறிக் கதறியே முறையிட்டாள்.
"இருவருமே ஒரே மாதிரி தானே தானம் செய்தோம், எனக்கு மட்டும் இங்கே ஏன் இந்த பாரபட்சம், ஏற்ற இறக்கம்" என்று வாதிட்டாள்.
அதற்கு இறைவனோ...
"முதலாமவளோ, தனக்கு பிறகும், தன் குழந்தையும் இந்த தானத்தை தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில், குழந்தையின் கையில் அரிசியைக் கொடுத்து தானம் செய்ய சொன்னாள்.
ஆனால், நீயோ... உன் கைகளால் எடுத்தால், அரிசி நிறையவே செலவாகும் என்ற எண்ணத்திலே, உன் குழந்தையின் கையால் எடுத்தே தானமிடச் செய்தாய்...
இருவரது செயலும் ஒன்றே..
எனினும் எண்ணங்கள் வெவ்வேறு" என்றார்.
எனவே, எந்த செயலை செய்தாலும், மேலான எண்ணங்களோடு செய்யும் செயல்களே நம் வாழ்க்கைக்கும் தொழிலுக்கும், ஆத்ம திருப்திக்கும், மனநிறைவான உணர்வுக்கும் வழி காட்டும்.
சுயலாபத்துக்காக செய்யும் செயல்களை விட, பொது நலத்துக்காக செய்யும் செயல்களே வலிமை வாய்ந்தவை, மேலானவை.
அதுவே இறைவனின் நியாயத் தராசில் எப்போதும் உயர்ந்து நிற்கும்.
கர்மவினைகள் உடனே தெரியாது காலம் தாழ்ந்து கிடைத்தாலும், கிடைக்கவேண்டியது கிடைத்தே தீரும்! விதி வலியது!

இங்ஙனம்
**திருமதி.சந்திரா ஸ்ரீதர்**
**ஆசிரியர்**



# இணை ஆசிரியர் பக்கம்

பொங்கல் தமிழர்களின் முக்கியமான பண்டிகை. இது அறுவடை விழாவாக மட்டுமல்லாமல், நன்றி சொல்லும் திருவிழாவாகவும் கொண்டாடப்படுகிறது. நாம் வாழ உதவும் இயற்கைக்கும், உழைக்கும் விவசாயிக்கும், உதவும் மாடுகளுக்கும் நன்றி கூறும் நல்ல நாள்தான் பொங்கல்.

பொங்கல் நாளில் புதுப் பானையில் பொங்கல் பொங்கி வழியும். அது நம் வாழ்க்கையிலும் மகிழ்ச்சியும் வளமும் பெருக வேண்டும் என்பதைக் குறிக்கிறது. சூரியன் ஒளி தருகிறது.மேகம் மழைநீர் தருகிறது.நிலம் பயிர்கள் வளர ஆதாரம் தருகிறது. இந்த எல்லா இயற்கை சக்திகளுக்கும் நன்றி சொல்லும் நாளே தைப்பொங்கல்.

மாட்டுப் பொங்கலில், விவசாயத்திற்கு உதவும் மாடுகளுக்கும் நன்றி கூறுகிறோம். காணும் பொங்கல் அன்று உறவுகளுடன் சேர்ந்து மகிழ்கிறோம். அன்பும் உறவுகளும் நம் வாழ்க்கையில் எவ்வளவு முக்கியம் என்பதை இந்த நாள் நமக்கு நினைவூட்டுகிறது.

இன்றைய காலத்தில் பலர் பெற்ற உதவிகளை மறந்து விடுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு துறையை எடுத்து கொண்டாலும் பெரும் சாதனைப் புரிந்தவர்களுக்கு உதவியர்கள் யாரேனும் இருப்பர்.  நன்றியுணர்வு மிகவும் முக்கியமான பண்பு.
**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று**
என்பது நாம் அனைவரும் அறிந்த திருக்குறளே!

தமிழர் திருவிழாக்கள் எல்லாம் எப்பொழுதும் கொண்டாட்டத்தோடு நம் பண்பையும் வளர்க்கும் வழிகாட்டுதலோடு இருக்கும்.சர்க்கரைப்பொங்கலின் இனிப்பைப் போலவே, நம் மனங்களிலும் நன்றியின் இனிமை இருக்க வேண்டும். இயற்கையைப் பாதுகாப்பதும், விவசாயியின் உழைப்பை மதிப்பதும், பெற்றோர் மற்றும் நம் மேல் அக்கறையை உள்ளவர்களுக்கு நன்றி சொல்லுவதும் பொங்கல் திருநாள் நமக்கு வலியுணர்த்தும் கடமையாகக் கொள்வோம்.

இந்த பொங்கல் திருநாளில், நம் வீடுகளில் மட்டுமல்ல! நம் உள்ளங்களிலும் நன்றியுணர்வு பொங்கி வழியட்டும்!

**புத்தகங்களை வாசிப்போம் !**
**உயிர்களை நேசிப்போம்!!**

இங்ஙனம்
**திருமதி.திவ்யா சங்கரசுப்பிரமணியன்**
**இணை ஆசிரியர்**



## திருக்குறள்



உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

**பொருள் :** உதவி என்பது, செய்யப்படும் அளவைப் பொருத்துச் சிறப்படைவதில்லை; அந்த உதவியைப் பெறுபவரின் பண்பைப் பொருத்தே அதன் அளவு மதிப்பிடப்படும்.

**Meaning :** Not according to the aid but its receiver Is its recompense determined.

திருக்குறள் எண்: 105
பால்: அறத்துப்பால்
அதிகாரம்: செய்ந்நன்றி அறிதல்

## கண்ணதாசன் காவிய வரிகள்




**கவிஞர் - கண்ணதாசன்**

# உணவே மருந்து

**திருமதி.ரேவதி சுகுமாறன்**



நான் என் முடிவுகளில் தெளிவு பெற யோகா பயணத்தைத் தொடங்கினேன். ஆனால் மனம் அமைதியாக இல்லாமல் தெளிவு வராது என்பதை புரிந்துகொண்டேன். யோகம் உடல், மனம், ஆன்மா ஒன்றாக இணைவது. யோகாவில் நான் மூச்சுப் பயிற்சிகளையும் தியானத்தையும் கற்றுக்கொண்டு வருகிறேன். இது மனதை அமைதிப்படுத்த மிகவும் உதவுகிறது.

இதோடு நான் “ஒலி தியானம்” பற்றியும் அறிந்தேன். மந்திரங்கள், ஜெபங்கள் போன்ற புனிதமான ஒலிகள் மனதை அமைதியாக்கும்.

சின்ன வயதில் என் அம்மா பிரார்த்தனை செய்யும்போது மந்திரம் சொல்லச் சொல்வார். இப்போது அதன் மதிப்பை நன்றாகப் புரிந்துகொள்கிறேன்.

சமீபத்தில் Strength in the Storm என்று ஏக்நாத் ஈஸ்வரன் எழுதிய புத்தகம் படித்தேன். அதில், ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடித்த ஒரு நல்ல சொற்றொடரை அல்லது மந்திரத்தைத் தேர்ந்தெடுத்து தினமும் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டும் என்கிறார். இதனால் கடினமான சூழ்நிலைகளை அமைதியாக சமாளிக்கலாம்.

இந்த மந்திரப் பழக்கத்தின் முக்கியத்துவத்தையும், அதை எப்படி வாழ்க்கையில் பயன்படுத்துவது என்பதையும் பகிர விரும்புகிறேன்.

1. கடினமான நேரங்களில் மந்திரம் உதவும்

கோபம், கவலை, மனச்சோர்வு, அழுத்தம் போன்ற உணர்ச்சிகள் வந்தால் நாம் தெளிவாக யோசிக்க முடியாது. ஆனால் மனம் அமைதியாக இருந்தால் நம் பிரச்சினைக்கு தீர்வு உள்ளேதான் இருக்கும்.

மந்திரம் கூறுவது இந்த  எதிர்மறை எண்ணங்களை குறைக்க உதவும்.

உதாரணம்:

நெரிசலில் சிக்கும்போது நம்மையே குறை சொல்வோம் அல்லது பிறரை குறை சொல்லுவோம்.அதற்கு பதிலாக மந்திரம் சொன்னால் மனம் அமைதியாகும்.

அந்த நேரத்தை இசை, வல்லுநர்களின் நல்ல கருத்துக்களை கேட்பது அல்லது ஆடியோபுக் போன்று பயன்படுத்தலாம்.

2. நிகழ்காலத்தில் இருப்பது

“பணி சலிப்பாக இருப்பதால் நாம் திசைதிரிவதில்லை; நாம் திசைதிரிவதால் பணி சலிப்பாகத் தோன்றுகிறது.”

நாம் பெரும்பாலும் கடந்தகாலம் அல்லது எதிர்காலம் நினைத்து திசைதிரிகிறோம்.இவை எல்லாம் பின்னால் வருத்தம், குற்ற உணர்வு, கவலை ஆகியவற்றைக் கொடுக்கலாம். நிகழ்காலத்தில் இருந்தால் மனம் தெளிவாகும், கவனம் கூடும்.

உதாரணம்:

என் கணவருடன் சில நேரம் வாக்குவாதம் ஏற்பட்டால், பழைய விஷயங்களைக் கூட நினைத்து மனம் காயப்படும்.ஆனால் நிகழ்காலத்தில் இருப்பது அந்த காயத்தை மேலும் பெருக்காமல் தடுத்துவிடும்.

3. மனத்துக்கும் நல்ல உணவு வேண்டும்

உடலுக்கு நல்ல உணவு தேவைப்படுவது போல, மனத்துக்கும் நல்ல எண்ணங்களும் அனுபவங்களும் தேவை.நாம் டிவி, மொபைல் போன்றவற்றில் நிறைய “ஜங்க் தகவல்கள்” பார்க்கிறோம்.

எழுத்தாளர் என்ன சொல்கிறார்:
- நல்ல உணர்ச்சி தரும் படங்கள் பாருங்கள்
- இயற்கை ஆவணப்படங்கள்
- தோட்டப்பணி, ஓவியம், இசை போன்ற பொழுதுபோக்குகள்
- நண்பர்களுடன் நேரம் செலவிடுதல்
- இயற்கையில் நடப்பது
- அருங்காட்சியகம், கலை அரங்குகள் பார்வை

நாம் சேரும் மக்களின் குணத்தையும் நம் மனம் ஏற்றுக்கொள்ளும்.
சிறிது சிறிதாக நல்ல எண்ணங்களை மனதில் விதைத்தால் கவனம் நிலைத்திருக்கும்.

4. கருணையைத் தேர்வு செய்வோம்
யாராவது நம்மைத் துன்பப்படுத்தினாலும், நாமோ நல்ல வார்த்தைகளுடன் தான் பதிலளிக்க வேண்டும்.

திருக்குறள் சொல்கிறது:
**தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு.**

"நாவால் சுட்ட காயம் ஆறும்; கெட்ட சொல் விட்ட காயம் எளிதில் ஆறாது."
அன்பாக பேசுவது நமக்கு உள்ளார்ந்த அமைதியை தருகிறது.

ஒரு விஷயத்தை சொல்ல வேண்டிய சூழ்நிலையில் இருந்தாலும், மரியாதையுடனும் அமைதியாகவும் சொல்லலாம்.

5. மனதை ஒளியாக மாற்றுவது
ரேடியோவில் சரியான அலைவரிசையைப் பிடிப்பது போல, நாமும் மனதை நேர்மறைக்கு மாற்றலாம்.சூழ்நிலை மாறாது, ஆனால் நாம் எப்படி எதிர்கொள்கிறோம் என்பதை மாற்றலாம்.
அமைதியான மனம் இருந்தால் உலகையே நல்லதாய் காணலாம்.

சுருக்கமாக:
- அமைதியான மனம் பிரச்சினைக்கு தீர்வைக் கொடுக்கும்
- நிகழ்காலத்தில் இருப்பது கவனத்தையும் அமைதியையும் அதிகரிக்கும்
- நல்ல எண்ணங்கள் மனத்தைப் பேணும்
- கடினமான சூழ்நிலைகளிலும் கருணை நமக்கு அமைதியைத் தரும்
- உணர்ச்சியிலிருந்து விலகி பேசுவது நியாயமானது
- மனதை நேர்மறைக்கு திருப்பினால் வாழ்க்கையில் ஒளி பெருகும்

# காதல் – தமிழர் பண்பாடு

**திருமதி. ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்**



தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளாகப் பலவற்றை இதுவரை சிந்தித்திருக்கிறோம். இந்த நிகழினி இதழில் தமிழரின் இரண்டு கண்களாகப் போற்றப்படும் காதல் – வீரம் இவற்றுள் காதல் பற்றிய செய்திகள் சிலவற்றைச் சிந்திக்க இருக்கிறோம்.

தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழம்பெரும் தமிழ் இலக்கண நூல் தொல்காப்பியம். அந்நூல் தோன்றுவதற்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் தோன்றிப் பல்கிப் பெருகிய இலக்கியங்களுடன் செழித்து
வளர்ந்து உன்னத நிலையடைந்ததாக இருந்திருக்க வேண்டும். அந்த இலக்கியங்களில் இருந்தே தொல்காப்பியம் என்ற இலக்கண நூல்தோன்றி இருக்க வேண்டும். எள்ளில் இருந்தே எண்ணெய் எடுக்கப்படுவது போல இலக்கியங்களைக் கொண்டே இலக்கண நூல்கள் எழுதப்படுகின்றன. அத்தகைய இலக்கியங்களே தொன்று தொட்டு வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவாக உள்ளன.

தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுக்கப் புகுந்த தொல்காப்பியர் தமிழர் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்தார். மொழிக்கு எழுத்திலக்கணமும், சொல் இலக்கணமும் வகுத்த தொல்காப்பியர் மக்கள் வாழ்க்கைக்குப் பொருள் இலக்கணம் வகுத்தார். அது மக்களின் அக வாழ்க்கையையும் புற வாழ்க்கையையும் எடுத்து இயம்புவதாகும்.

அக வாழ்க்கையை அகப் பொருள் இலக்கணமும், புற வாழ்க்கையைப் புறப் பொருள் இலக்கணமும் விளக்குகின்றன. மொழி இலக்கணத்தில் இப்படியொரு பாகுபாடு உலக மொழிகளில் எந்த வொரு மொழியிலும் இல்லாத , தமிழ் மொழிக்கு மட்டுமே உள்ள ஒரு தனிச்சிறப்பு ஆகும். தமிழ் மக்களின் அக வாழ்க்கையின் அடிநாதமாக் காதலும், புற வாழ்க்கையின் அடையாளமாக வீரமும் இருந்ததைப் பண்டைய தமிழ் இலக்கியங்கள் வெகுவாகச் சிறப்பித்துப் பாடுகின்றன.

நிகழினியின் இந்த இதழில் அக வாழ்க்கையின் பாடுபொருளான 'காதல் ' தமிழ் மக்களுடைய வாழ்க்கையில் எப்படி இரண்டறக் கலந்து இருந்தது என்பதைச் சில எடுததுக்காட்டுகளின் அடிப்படையில் சிந்திப்போம்.

**தொல்காப்பியம் போற்றும் காதல்:**

தொல்காப்பியர் காதல் பற்றிக் களவியல், கற்பியல் என்ற இரண்டு பகுதிகளில் விரிவாக விளக்குகிறார். பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உறவு, நிறையருள், உணர்வு, திரு போன்ற ஆளுமைக் குணங்கள் ஒன்றுபட்டிருக்கும் ஆணும் பெண்ணும் தெய்வம் கூட்டவோ, அல்லது விதி வழியாகவோ, எதிர்பாராத விதமாகச் சந்தித்துக் கொள்கின்றனர். இச்சந்திப்பு அவர்களின் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தொல்காப்பியர் காதலை அன்பின் ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை என மூன்று பகுதிகளாக வகுத்துள்ளார். இவற்றுள் அன்பின் ஐந்திணையே சிறப்புடையதாகும். ஐந்திணைகளான குறிஞ்சித் திணை, முல்லைத்திணை,

மருதத்திணை, நெய்தல் திணை, பாலைத் திணை என ஐவகை நிலங்களுக்கு ஏற்ப சூழல், தொழில், சுற்றம் மற்றும் இயற்கையை ஒட்டிப் புணரும் காதல் ஆகும்.

குறிஞ்சியில் புணர்தலும், முல்லையில் இருத்தலும், பாலையில் பிரிதலும், மருதத்தில் ஊடலும், நெய்தலில் இரங்கலும் ஆகிய காதல் ஒழுக்கங்கள் இயற்கையோடு ஒட்டி நிகழ்வது அன்பின் ஐந்திணைக் காதல் எனப்படும்.

ஒருவனும் ஒருத்தியும் (தலைவனும் தலைவியும்) தமக்குள்ளே எதிர்ப்பட்டுக் காதல் கொள்வது **குறிஞ்சித் திணை** எனப்படும்.

தலைவன் பொருள் ஈட்டுவதற்காகவோ, கல்வி கற்பதற்கோ, போர்க்களத்திற்கோ, தூதுவனாகவோ சென்ற நேரத்தில், பிரிந்திருக்கும் சூழலில் தலைவி காத்திருப்பது **முல்லைத் திணை** எனப் பெயர் பெறுகிறது.

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே பல்வேறு காரணங்களால் பிணக்குகள் வரலாம். இதனை ஊடல் என்று கூறுவர். இந்த ஊடலைக் குறிக்கும் திணை **மருதத் திணை** எனப்படும்.

கடலில் மீன் பிடிக்கச் சென்றோ, பிற காரணங்களாலோ தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வர இயலாத சூழலில், தலைவி அவனுக்காகக் கவலைப்பட்டு இரங்கி நிற்றலை **நெய்தல் திணை** என்பர்.

பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்து செல்லும் தலைவனுக்கு வழியில் என்ன நேருமோ என்று இல்லத்தில் இருக்கும் தலைவி கவலைப் படுவதும், இல்லத்தில் இருக்கும் தலைவி குறித்துத் தலைவன் கவலை கொள்வதும் **பாலைத்திணை** எனப்படும்.

இவையே **அன்பின் ஐந்திணை** என்று அழைக்கப்படுகின்றன. பழந்தமிழரின் அக வாழ்க்கையில், கற்பு(இல்லறம்) வாழ்க்கைக்குக் களவுக் காதல் அடித்தளமாக இருந்திருக்கின்றது. களவுக் காதலில் தலைவனும் தலைவியும் தங்கள் பார்வையின் மூலமே தங்கள் காதலை உறுதிப்படுத்திக் கொண்டனர் என்பதை வள்ளுவர்,

**யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்**
**தான்நோக்கி மெல்ல நகும் (குறள் 1094)**

என்ற குறள் மூலம் அழகாக எடுத்துரைக்கிறார்.

வால்மீகி இராமாயணத்தில் இராமன் வில்லை முறித்துச் சீதையை மணக்கிறான். ஆனால் கம்பனின் இராமன் வில்லை முறிக்க வரும்போதே இராமனை மேல் மாடத்திலிருந்து சீதை பார்க்கிறாள். இராமனும் அவளை நோக்குகிறான். இருவரும் தம் உள்ளக் குறிப்புகளைக் கண்களால் பரிமாறிக் கொள்கின்றனர் என்பதைக் கம்பர்,

"**அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்**" என்று தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்ப அந்த நிகழ்ச்சியை வருணிக்கிறார்.

தலைவியும் தலைவனும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் காதல் வயப்படுகின்றனர். அவர்கள் உள்ளம் ஒன்றோடு ஒன்று கலக்கிறது. இதை மிக அழகாக, எளிமையாக எடுத்துரைக்கிறது ஒரு குறுந்தொகைப் பாடல்.

**"யாயும் ஞாயும் யாரா கியரோ ?**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்?**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே."**

(குறுந்தொகை 40)

"என் தாயும் உன் தாயும் முன்னமே அறிமுகமானவரா? என் தந்தையும் உன் தந்தையும் உறவினர்களா? நீயும் நானும் இதற்கு முன்பு ஒருவரை ஒருவர் அறிந்தவர்களா? இது எதுவுமே இல்லை. ஆனாலும் செம்மண் நிலத்தில் மழை நீரையும், செம்மண்ணின் நிறத்தையும் எப்படிப் பிரிக்க முடியாதோ, அப்படி அன்பு கொண்ட நம் நெஞ்சங்கள் ஒன்று கலந்தனவே" என்பது பாடலின் பொருள்.

இந்தக் காதல் உறவு இந்த ஒரு பிறவியில் ஏற்பட்டதல்ல; பிறவிதோறும் தொடர்வது என்று நம்பினார்கள். அதாவது, போன பிறவியில் கணவன் மனைவியாக இருந்தவர்கள் தாம் இந்தப் பிறவியிலும் கணவன் மனைவி ஆகிறார்கள். இனிவரும் பிறவிகளிலும் இவர்களே கணவன் மனைவியராக இருப்பர் என்ற நம்பிக்கை தமிழர் பண்பாட்டில் இருந்தது என்பதை,

**"இம்மை மாறி மறுமை யாகினும்**
**நீயாகியர் எம் கணவனை**
**யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளே"** (குறுந்தொகை 49) என்ற பாடல் மூலம் அறிகிறோம். எனவே காதல் என்பது ஏதோ திடீரென்று இருவர் சந்தித்துக் கொள்வதால் ஏற்பட்டு விடுவதன்று என்பது பண்டைத் தமிழரின் நம்பிக்கை.

சங்க காலத்துக் களவுக் காதல் கற்பு வாழ்விற்கு (அதாவது இல்லற வாழ்விற்கு) ஒரு வாயிலாக அமைந்தது. ஆகவே அக்களவுக் காதல் புனிதமானதாகக் கருதப்பட்டது. சங்க காலச் சமுதாயம் களவுக் காதலை மதித்துப் போற்றியது. களவுக் காதலர் மணம் புரிந்து இல்லறத்தை நல்லறமாய் நடத்துவதைப் பற்றிக் கூறுவது கற்பொழுக்கம் ஆகும். அகத்திணை கூறும் தூய்மையான அறங்களுள் முதன்மையானது களவு வழிப்பட்ட கற்பு வாழ்க்கையாகும்.

காதலால் ஒருமித்துச் சேர்ந்து வாழ்ந்தவர்கள் இடையே பிரச்சினைகள் ஏற்பட்டுப் பிரிவு ஏற்பட்டபோது, அதனைத் தடுப்பதற்காகப் பின்நாளில் திருமணம் என்ற சடங்கு ஏற்படுத்தப்பட்டது. அதனைத் தொல்காப்பியர்,

**"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**அய்யர் யாத்தனர் கரணம் என்ப"**
என்று கூறுவார். தொல்காப்பியர் குறிப்பிடும் "அய்யர்" என்பவர் சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக, அனுபவம் மிக்கவர்களாக, சான்றோர்களாக அறியப்பட்டவர்கள். "கரணம் " என்பது திருமணச் சடங்கைக் குறிக்கும் சொல்.

மிகப் பழங்காலத்தில் திருமணம் என்பது ஒருவனையும் ஒருத்தியையும் கணவன் மனைவியாக்கும் ஒரு பண்பாட்டின் அடையாளமான எளிய நிகழ்ச்சியாக இருந்தது. ஆண் பெண்ணுக்கு மங்கல நாண் அணிவிக்கும் பழக்கம் இல்லை. கி.பி. 2ஆம் நூற்றாண்டிலிருந்து தான் தீ வளர்த்தல், தீயை வலம் வருதல், மந்திரம் ஓதுதல், அம்மி மிதித்து அருந்ததி காட்டுதல் போன்ற வழக்கங்கள் தமிழர் திருமணத்தில் புகுந்தன. பழந்தமிழர் வாழ்க்கையில் காதல் என்பது உண்மையான, எளிமையான, ஆடம்பரம் இல்லாத அழகிய பண்பாடாக ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கிறது.

இதுவரை நாம் பார்த்தது ஒரு துளிதான். இது போன்ற நிறைய செய்திகளைத் தன்னுள் பொதிந்து வைத்திருக்கிறது நம் தமிழ் இலக்கியம் என்னும் அட்சய பாத்திரம்!

# சத்தமில்லா ஓசைகள்

மௌனம் –
மௌனங்கள் எல்லாம்,
அமைதியின் சாயல் அல்ல...
சில நேரங்களில்,
அவை பிறவாக் குரல்.

தொலைந்துபோன சத்தங்கள் –
நாவில் சிக்காத வார்த்தைகள்.

யாரும் கேட்காத இசை,
ஒருவரும் வாசிக்காத பக்கம்,
கண்ணால் வரையும் ஓவியம்,
காற்றில் எழுதும் மொழி.

யாரையும் தீண்டாத
தீப்பிழம்பு.

மௌனம் –
ஓசையற்ற சத்தம்.



**திருமதி. வனதுர்கா வெங்கடேஸ்வரன்**

# வார்த்திகம்

தமிழன்னை ஈன்றெடுக்க
சுதந்திர தேவி தத்தெடுக்க இக்குடில் வந்தோமம்மா...

வார்த்திகம் (முதுமை) வந்தவுடன் ஈன்றவளின் கை விலக மனம்
ரணமாகிப்
போனதம்மா...

வார்த்திகம் (முதுமை) வந்தவுடன்
நான் ஈன்றவர்களா...? இல்லை என்னை ஈன்றவர்களா...?,
இருபிடியிலும் மனம் இருக்க வாடுதம்மா...


வார்த்திகம் (முதுமை) வந்தவுடன்
நான் அறிந்தேன் இப்பிறவியில் என் வாழ்க்கை நாடோடி என்றம்மா...

குடிபெயர்ந்த அனைத்து உறவுகளுக்கும் சமர்ப்பிக்கிறேன் !



**திருமதி. தேவி**

# கவிதைகள் சொல்லவா?



இணைந்தும் இணையாத
இணைபாதையாய் நாம்.
நான் என் வழியில்,
நீ உன் வழியில்.
நடைகள் வேறு,
பயணம் ஒன்று.
என் கனவுகளில்
நீ தடையல்ல,
உன் பயணத்தில்
நான் சுமையல்ல.
உன் வழியில் நான்
குறுக்கிடாமல்,
என் பாதையில் நீ
தலையிடாமல்—
அன்பின் மரியாதை.
ஆனாலும்—
ஒரே திசையில்,
ஒரே காற்றில்,
ஒரே ஒளியில்
நம் நிழல்கள்.
பிரியாமல்
பிரிந்து சென்று,
விலகாமல்
தொடர்வதே
நம் உறவு.
இணைந்தே இருப்போம்
நெடுந்தூரம்.



**திருமதி. திவ்யா சங்கரசுப்பிரமணியன்**



# புதுமைப்பெண் பாகம் - 5

**திருமதி. பத்மா தினேஷ்**

சாந்தாவிற்கு தூக்கமே வரவில்லை, தன் அம்மாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள். நாராயணன் சார் சொன்ன மாதிரியே எங்கம்மா ரொம்ப தைரியசாலியா நம்பவே முடியலையே, பல சிந்தனைகள் ஓடியவரே எப்பொழுது உறங்கினாள் என்று தெரியவில்லை. விடிந்ததும் ஒரே தலைவலி லீவு போட்டுவிட்டு வீட்டிலேயே இருந்தாள். என்னடி ரொம்ப அதிசயமா இருக்கு ஆபீசுக்கு லீவெல்லாம் போடற, என்ன ஆச்சு உனக்கு, அம்மா அடுப்பறையில் இருந்து கேட்டாள்.

ஒன்னும் இல்லம்மா, ஒரே தலை வலி அதுவும் இல்லாம தங்கச்சி சாயங்காலம் ஷாப்பிங் போனோம் சொன்னா, சீக்கிரமா வர முடியாது, அதுக்கு பதிலா லீவ் போட்டு இருந்திரலாம்னு இருந்துட்டேன். தங்கச்சிக்காக ஷாப்பிங் போறதுக்கு எல்லாம் நீ லீவ் போடுவியா அதிசயம் தான், என்று அம்மா சிரித்தாள். சரி அதெல்லாம் விடு அம்மா உன்கிட்ட மனசு விட்டு பேசி ரொம்ப நாளாச்சு பேசலாம்னு தான் லீவு போட்டேன்னு வச்சுக்கோவே. என்னடி சின்னவளோட கல்யாண வேலை தானே, எல்லாம் நல்லபடியா நடக்கும் அதை நினைச்சு நீ கவலைப்படாத அதுக்கு தான் வந்த தலைவலியா அது, என்று தைலத்தை தலையில் தடவினால் தடவி விட்டாள்.

தைலம் தடவிய கைகளை இறுக்க பற்றி, அம்மா உங்க ஊர் பத்தி, உன்னோட சின்ன வயசு கதை, ஏதாவது சொல்லேன். கேட்கணும் போல இருக்கு அப்புறம் அப்பா, நீங்க, உங்க கல்யாணம், அத பத்தி ஏதாவது சொல்லேன். லீவு போட்டுட்டு என்ன பண்றதுன்னு தெரியாம, என்கிட்ட கதை கேக்குறியா? போடி போய் ரெஸ்ட் எடு. அம்மா அம்மா தயவு செஞ்சு சொல்லேன், என்று சிறு குழந்தை போல் அடம்பிடித்தாள். ஒரு பெருமூச்சு விட்டு அம்மா சொல்ல ஆரம்பித்தாள்.

உனக்கு தான் தெரியுமே பாட்டி வீடு பூவேலி கிராமம். பேருக்கு ஏத்த மாதிரி ரொம்ப அழகான ஊரு. நான் ஒரே பொண்ணு அதனால எங்க அப்பா என்ன ரொம்ப செல்லமா வளர்த்தாரு. என்ன காலேஜ் படிக்க வேண்டும் என்று நினைத்தேன், படிக்க முடியல. அதுக்குள்ளேயும் ஊர்க்காரங்க தொல்லை தாங்க முடியாம உங்க அப்பாவ எனக்கு கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்க. அவரு அவரையும் லேசில் பிடிக்கல அலசி ஆராய்ந்து கவர்மெண்ட் உத்தியோகத்தில் இருக்கிறவரா பார்த்து உங்க தாத்தா என்ன கல்யாணம் பண்ணி வச்சாரு.

சாந்தா: சின்ன வயசுல நீ எப்படிம்மா, ரொம்ப துரு துருன்னு இருப்பியா? இல்லை இதே மாதிரி ரொம்ப அமைதியா, ஸ்கூல் விட்டா வீடு வீடு விட்ட ஸ்கூல் அப்படின்னு இருந்தியா?

அம்மாவின் முகத்தில் ஒரே சிரிப்பு, சந்தோசம். சின்ன வயசுல எங்க ஊர்ல நான் பண்ணாத சேட்டையே கிடையாது ரொம்ப துரு துருனு தான் இருப்பேன் மாந்தோப்பில் போய் மாங்காய் திருடுவதும், வீட்டுக்கு தெரியாம வெளிய போறதும், கோயில் போறேன்னு சொல்லி கொட்டகைக்கு படம் பாக்க போறதும். என்னோட சேர்ந்து மொத்தம் நாலு பேரு. எங்க ஊரிலேயே டூவீலர் ஓட்டின முதல் பொண்ணு நான் தான் தெரியுமா? அப்புறம் ஏன் மா இப்படி ஆயிட்ட?

அம்மா சில மணித்துளிகள் மௌனம் காத்தாள். ஏதோ மனதில் ஆழமாய் ஓடியது, அம்மா தொடர்ந்தாள், உங்க அப்பா என்னமோ நல்லவர் தான். ஆனா என்ன அவர் வேலை பார்த்த

இடம் ஒரு ரொம்ப குக்கிராமம், வசதியே இருக்காதுன்னு சொல்லிட்டு என்னைய அவங்க குடும்பத்துடைய விட்டுட்டு போயிட்டாரு. உங்க அப்பா குடும்பம் ரொம்ப பெரிய குடும்பம். இரண்டு நாத்தனார் ஒரு கொழுந்தனார் மாமனார் மாமியார்.. எவ்வளவு பெரிய குடும்பத்துல நான்தான் மூத்த மருமக. எங்க வீட்ல நான் எவ்வளவு சுதந்திரமா இருந்தேனோ, அந்த அளவுக்கு எதிர்மறையா அங்கு அடைப்பட்டு போனேன். பொண்ணுக்கு தனியா இலக்கணமே எழுதி வைத்திருந்தார்கள்.

உங்கப்பா கெட்டவர் எல்லாம் கிடையாது. ஆனா யார் என்ன சொன்னாலும் நம்புகிறவர். அதுவும் அவங்க குடும்பத்தில் இருக்கிறவங்களே என்னை பத்தி ஏதாவது தப்பா சொன்னா? என்ன பண்ணுவாரு மனுஷன், நம்பித்தானே ஆவார்.

நான் நின்னா குத்தம், நடந்தா குத்தம், சமையல்ல ஏதாவது ஒரு குறை, பேசுறதுல குறை, நடக்கிறதுல குறை ,இப்படி எல்லாத்துலயும் குறை கண்டுபிடிச்சிட்டே இருந்தாங்க. அந்த வீட்ல விடியற்காலை என்பது சூரியன் உதிப்பதற்கு முன்னாடியே தொடங்கிடும். என் மாமியார் கடுமையானவர். ஒரு நிமிடம் ஓய்வு எடுத்தாலும் நாங்க எல்லாம் அந்த வயசுக்கு பிறகும் வேலை செய்கிறோம், உனக்கு என்ன கஷ்டம்னு திட்டுவாங்க. சாப்பாடு, எல்லாரும் சாப்பிட்டு முடிச்ச பிறகு தான். உடம்பு சரி இல்லைன்னு படுத்துக்கிட்டா வேலை செய்ய சோம்பேறித்தனம் அப்படின்னு சொல்றது. அப்பெல்லாம் இரண்டு மாதத்துக்கு ஒரு தடவைதான் உங்க அப்பா வீட்டுக்கு வருவாரு. இரண்டு மூன்று வாரங்களுக்கு ஒரு முறை ஒரு தபால் வரும், எல்லோரும் எப்படி இருக்கீங்க அப்படின்ற வார்த்தையிலேயே நான் அடங்கிருவேன். தனியா எல்லாம் விசாரிக்க மாட்டார். என்னை பத்தி கேட்ட தப்பா நெனச்சிருவாங்கன்னு போட மாட்டார்.
ஒருமுறை கடுமையான காய்ச்சல் எழுந்து நிக்க கூட முடியல சொல்றதுக்கு யாரும் இல்லை அதுவா சரியாயிரும் அப்படிங்கிற அலட்சியம். என்னால பொறுக்க முடியாம ஒரு கட்டத்துல வீட்டை விட்டு வந்துட்டேன்.
சாந்தா: நீயாமா? வீட்டை விட்டு வந்தியா அந்த அளவுக்கு தைரியமா முடிவெடுத்தியா என்னால நம்பவே முடியலையே! சூப்பர் மா, அப்புறம் என்ன நடந்தது? அப்போ உன்னை கூட்டிட்டு போனாரா? அப்பா உனக்கு ஆதரவா பேசினாரா? சீக்கிரம் சொல்லு தாங்க முடியல.

உங்க அப்பா தானே, வந்தாரு.....

தொடரும்....

## வானவில் வண்ணங்கள்






**-செல்வி.அனன்யா**

# வண்ணமயமான பொங்கல்





-செல்வன்.ஹர்ஷித் கார்த்திகேயன்

# அருள்மிகு முருகன் (முருகப்பெருமான்)




-செல்வன்.கல்கி சாய்

# மைந்தனின்  ஆனந்த பொங்கல்






**-செல்வன்.துருவ் சேஷாத்ரி**


# பொங்கல் ஓவியம்






**– செல்வன். ஓம்**

## குழந்தை ஓவியம்




**-செல்வன்.மகத்சாய்**

## கைவினையில் பொங்கல்



**– செல்வி.இனியா கோகுல் சுகுணா**

## பாரதியார் ஓவியம்




## கோலம்






-செல்வன்.வருண்


## வீட்டுப் பொங்கல்




-செல்வன். நிவின் பிரபு

# நிலத்தில் பூத்த கவிதை - அன்னை போட்ட கோலம்







**திருமதி. சாந்தி**
(திருமதி. தேவியின் அம்மா)

# பொங்கலோ பொங்கல்






**-செல்வன்.சுகின்**

# கோலம் - சிறப்புகள்

**கோலம்:**

கணிதம் மற்றும் ஆன்மிகத்தின் அழகிய சங்கமம்.கோலம் என்பது தென் இந்திய பாரம்பரியக் கலை வடிவமாகும், இது கணிதம் மற்றும் ஆன்மிகம் என்ற இரண்டு துறைகளின் அழகிய இணைவாக அமைந்துள்ளது. அரிசி மண், சித்தி அல்லது நிறமுள்ள மண்ணின் தூளைப் பயன்படுத்தி வரையப்படும் இந்தக் கோலங்கள் வட்டின் வாயில்களிலும், கோவில்களிலும், சமூகவிடங்களில் அழகிய வடிவங்களை உருவாக்குகின்றன.

இவை ஒரு ஆன்மிகப் பரிசு மற்றும் கணிதப் புதிர் ஆகியவையாக அமைகின்றன.அதில் அதுவே தெய்வீக ஆசீர்வாதங்களை வரவேற்கும், கோச்மிக் ஒழுங்கை பேணும் மற்றும் நேர்மறை சக்தியைக் குவிக்கும் முக்கிய குறிக்கோள் உள்ளது.
கோலத்தில் கணிதம் மற்றும் ஆன்மிகம் ஆகிய இரண்டு அம்சங்களின் இந்த சங்கமம், தெய்வீக மற்றும் புத்திசாலித்தனமான படைப்பு மற்றும் அறிவியலின் ஆழ்ந்த இணைப்பை வெளிப்படுத்துகிறது. இங்கு இரு அம்சங்களும் எப்படி ஒன்றிணைக்கின்றன என்பதை பார்க்கலாம்.

1. கணித ரீதியான துல்லியம் மற்றும் கணித அமைப்பு கோலம் அடிப்படையில் கணித ரீதியான அமைப்பு கொண்ட வடிவமாகும்.இது குறிப்பிட்ட விதிமுறை களை பின்பற்றி உருவாக்கப்படும் பின் அமைப்பைக் கொண்டுள்ளது. இந்த வடிவங்கள் பெரும்பாலும் புள்ளிகள் அல்லது புள்ளிகள் (அருகில் அமைந்துள்ள சிறிய புள்ளிகள்) அடிப்படையாக உருவாக்கப்படுகின்றன.

இந்த புள்ளிகள் ஒரு அடிப்படையை வழங்குகின்றன. அதன் மீது சிக்கலான கோடுகள், வளைவுகள் மற்றும் வடிவங்கள் வரையப்படுகின்றன. இந்தப் புள்ளிகள், கணிதத்தில் பரவலாக உள்ள இனிமையான அமைப்புகளுக்கு (lattices) ஒத்திருக்கின்றன. இது இடத்தில் புள்ளிகளை சீரான முறையில் அமைப்பதைக் குறிக்கின்றது.

கோலத்தின் அளவையும் வடிவமைப்பையும் குறிக்கும் பொருட்டு, யூகிளிடியன் பகுதி அறிவியல் (Euclidean Geometry) போன்ற வடிவியல் அமைப்புகள் பயன்படுகின்றன. கோலங்களில் பொதுவாக சதுரங்கள், வட்டங்கள், முக்கோணங்கள் மற்றும் நட்சத்திரங்கள் போன்ற பொருள்கள் காணப்படுகின்றன, இவை சீரான அடிப்படையில் சரியான விகிதங்கள் மற்றும் அளவுகளுடன் கணக்கிடப்பட்டுள்ளன.
கோலத்தில் பொதுவான சமவிகிதம் மற்றும் வழித்தலோடும் சமமுள்ள அமைப்புகள் காணப்படுகின்றன, இது கட்டமைப்பை மீறாமல் கவர்ந்துவருவதற்கான அம்சங்களைக் குறிக்கின்றன. இது கணித ரீதியான பரிமாணங்களை மற்றும் பிரச்சினைகளை மிக அழகாக வெளிப்படுத்துகின்றது.

2. ஒத்திகை : கணித மற்றும் ஆன்மிகத்தின் இடையிலான பாலம்
கோலங்களில் குறிப்பிடத்தக்க அம்சம் தான் ஒத்திகை . கணிதத்தில், ஒத்திகை என்பது மாற்றங்களுக்கு உட்பட்டு வடிவம் மாற்றாத தன்மையைக் குறிக்கின்றது.

அதாவது, ஒரு வடிவத்தை மடக்கு அல்லது திரும்பியவுடன் அது முன்னைய வடிவத்தைப் போலவே இருக்கும் என்பதை உணர்த்துகிறது. ஆன்மிக ரீதியில்,கோலத்தில் உள்ள

ஒத்திகை உலகின் அழகிய ஒழுங்கினைக் குறிக்கின்றது, அந்த ஒழுங்கு தெய்வீகக் கலைப்படையிலும், பரப்பிலும் பிரகாசமாக உண்டாகும்.கோலங்களில் மதிப்பான ஒத்திகை உலகின் வழிமுறைகளை காட்டுகிறது.கோலம் அதன் கோசிக அமைப்பை நிலை நாட்டுகின்றது, அதாவது, கோலத்தின் ஒத்திகை மாறாமல் இருப்பது அந்த அமைப்பின் அழகான தொகுப்பை வெளிப்படுத்துகின்றது. இது ஆன்மிக ரீதியில் மதிப்புடையது எனவே மைய கோசிகமாக இருத்தல் அல்லது மறுபரிசோதனை வேண்டும் என்ற நினைவில் உள்வாங்குகின்றது.

3. தெய்வீக சக்தி
தெய்வீக சக்தியை வரவேற்கின்றது. ஆன்மிகத்தின் கணித வழிமுறை
கோலம் பல வழிகளில் தெய்வீக சக்தியை வரவேற்கிறது. இது பொதுவாக
லட்சுமி, செல்வம் மற்றும் வளமையின் தெய்வத்துக்கு நேரிடையாக பரிசாக அமைகின்றது. கோலத்தின் உருவாக்கம், கோலத்தின் மூலம் அந்நிகழ்வு நேரடியாக தெய்வீக சக்தியை வரவேற்கும் வடிவமாக அமைகின்றது. கணித ரீதியில், புள்ளிகள் மற்றும் கோடுகளுக்கான அமைப்பு ஒரு குறிக்கப்பட்ட வழியாகச் செயல்படும்.அதுவே அதிர்வு அல்லது ஆன்மிகப் பரப்பின் வழிகளை வடிவமைக்கின்றது.
இந்த அற்புதமான செல்வாக்கு தருவதாக உள்ளவைகளை மெய்யினால் அல்லது ஆன்மிகத்தில் பயன்படுத்துவது.

4. காலத்தன்மை அழகு:
உருவாக்கம் மற்றும் அழிவின் சுழற்சி
கோலத்தின் தனித்துவமான அம்சம் அதன் காலத்தன்மை பெருமை ஆகும் — பல கோலங்களை ஒவ்வொரு நாளும் வரையப்பட்டு, ஒரு நாளுக்குப் பிறகு அழிக்கப்படுகின்றன.குறிப்பாக அரிசி மாவுடன் வரையப்பட்ட கோலங்கள், இந்த தற்காலிகத்தனம், வாழ்க்கையின் தற்காலிகத்தன்மையைப் பிரதிபலிக்கின்றது.

இது பல ஆன்மிக மரபுகளிலான முக்கிய கருத்தாகும், குறிப்பாக இந்து மதம் மற்றும் பௌத்தம். கோலத்தை உருவாக்கி, அதை நேரத்துடன் மங்கவிட விடுவதே. இருப்பின் சுழற்சியை க் குறிக்கின்றது — பிறப்பு, வாழ்க்கை , இறப்பு மற்றும் புதுப்பிறவி.
கணித ரீதியில், இந்த தற்காலிக தன்மை பிராக்டல் ஜியோமெட்ரி (Fractal Geometry) என்ற கலைக்கூறு கொள்கையுடன் தொடர்புடையது, இதில் வடிவங்கள் மற்றும் அம்சங்கள் பல்வேறு அளவுகளில் மீண்டும் மீண்டும் தொடங்கும், அது முடிவற்ற வளர்ச்சி மற்றும் மாற்றத்தின் உணர்வை ஏற்படுத்துகின்றது. ஒரு கோலத்தின் சிறிய புள்ளிகள் மற்றும் கோடுகள் பெரிய கோச்மிக ஒழுங்கின் பிரதிபலிப்பாக சுயசமான வடிவங்களை உருவாக்குகிறது, இதன் மூலம் ஆன்மிகக் கருத்து இது தெரியவைக்கும் — வாழ்க்கையின் சிறிய பகுதியிலும், அங்கும் முடிவற்ற விசாரங்கள் பிரதிபலிக்கின்றன.

5. ஆன்மிக அறிவும், நினை வூட்டலும் வளர்ப்பது
கோலத்தை வரையும்போது கவனம், நினைவூட்டல் மற்றும் தற்போதைய நிலையிலும் ஈடுபாடு தேவைப்படுகிறது. கோலம் கணிதக் கருத்துகளான ஒத்திகை , ஜியோமெட்ரி மற்றும் இடம் உணர்வு போன்றவற்றில் ஆழ்ந்த அறிவு கொண்டுள்ளது, அது ஒரு தீவிரமான மதிப்புடன் செய்யும் செயலாகும். ஒவ்வொரு கோடு வரையும்போதும் அது ஒரு அறிவார்ந்த பூஜை செயல் ஆகும்,.அதனால் கோலத்தை வரையும் நபர் முழுமையாக தற்போதைய கணக்கில் ஈடுபட்டிருப்பார். இந்த நினைவூட்டல் ஆன்மிக தியானம் போன்றது, அதில் நபரின் முழு கவனம் வடிவத்தை உருவாக்குவதில் செலுத்தப்படுகிறது, இதன் மூலம் மனதை அமைதி மற்றும் தெளிவின் நிலைக்கு கொண்டு செல்ல முடியும்.

இந்த இடத்தில், கோலம் ஒரு ஆன்மிகப் பயிற்சியாக செயல்படுகிறது. இது வெறும் கலை வடிவம் அல்ல. அதே சமயம், இறைவனுடன் பணிவாக, மனதில் கவனத்தை ஈர்க்கும் ஒரு வழியாகும். அது தியானம் அல்லது பிரார்த்தனையின் போல், தனி நோக்கம் கொண்ட ஒரு செயலுக்கு மனதை விரிந்துவைத்து அமைதி மற்றும் ஆன்மிக மறுசீரமைப்பை ஊக்குவிக்கின்றது.

6. கோலம்: சமூகவியல் மற்றும் பகிர்ந்த பணிவின் சின்னம்

கோலத்திற்கு ஒரு சமூகத் தன்மையும் உள்ளது, குறிப்பாக திருவிழாக்கள் மற்றும் கலாச்சாரச் சந்திப்புகளின் போது. பொதுவான இடங்களில் அல்லது கோயில்களின் சுவர்களிலும் கோலங்கள் வரையப்படும் போது, அது தனிப்பட்டவர்கள், குடும்பங்கள் மற்றும் அயலவர்கள் அனைவரையும் ஒரு பகிர்ந்த உணர்வில் ஒன்றிணைக்கின்றது. இந்த சமூக உணர்வு கணித ரீதியில் நெட்வொர்க் கோட்பாடு (Network Theory) மூலம் புரிந்து கொள்ளலாம்.கோலத்தின் புள்ளிகள் மற்றும் கோடுகள் இணைக்கப்பட்ட கட்டமைப்பை உருவாக்குவது போலவே , சமூகமும் பகிர்ந்த ஆன்மிக நம்பிக்கைகளில் மற்றும் நடைமுறைகளில் ஒன்றிணை க்கின்றது.

கிராமப்புறக் கிராமங்களில், பெண்கள் அதிகமாக காலை நேரங்களில் கோலங்களை வரைவது சாதாரணமானது.இது சில சமயம் குழுவாக ஒருங்கிணைந்து செய்யப்படுவதையும் காணலாம், ஒவ்வொரு பெண்ணும் ஒரு பெரிய, கூட்டு வடிவமைப்பில் பங்கெடுக்கின்றார். கோலத்தின் இந்த சமூகத் தன்மை , பகிர்ந்த ஆன்மிக பயணத்தை பிரதிபலிக்கின்றது, இதில் தனி கடமைகள் ஒன்றிணைந்து பெரிய ஒருங்கிணைந்த வடிவத்தை உருவாக்குகின்றன.

கணிதம் மற்றும் ஆன்மிகம்: இறைவனை இணைக்கும் இடம்
கோலம் என்பது கணித அமைப்பு மற்றும் ஆன்மிகப் பயிற்சி ஒன்றாக கலந்துக் கட்டப்பட்ட மிகச் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். இது பொருளாதார மற்றும் ஆன்மிக உலகங்களின் இடையே சமநிலையை பிரதிபலிக்கின்ற கலை வடிவமாகும். அதே சமயம் கணிதத்தின் துல்லியத்தை உடையதாகவும் உள்ளது.

கோலத்தில் உள்ள வடிவங்கள் வெறும் கண்ணியமானவை மட்டுமல்ல, அவை ஒரு புனித ஜியோமெட்ரி (Sacred Geometry) ஆக இருக்கின்றன.இது கோச்மிக ஒழுங்கு, தெய்வீக காப்பகம் மற்றும் அனைத்துப் பிறப்புகளின் இணக்கத்தை பிரதிபலிக்கின்றது.

பயன்கள்
வரவேற்கும் நோக்கத்தில், ஒரு இடத்தை புனிதப்படுத்தும் நோக்கத்தில் அல்லது வெறும் தியானத்தின் வழியாக வர யப்பட்டாலும், கோலம் இன்னும் ஒரு ஆழ்ந்த நடைமுறையாக இருக்கிறது.இது கணிதத்தின் புத்திசாலித்தனத்தையும் ஆன்மிகத்தின் அடியோன்றலை உணர்த்துகிறது.

**திருமதி. சிந்தியா**

# குறிஞ்சி முத்தமிழ் சங்கத்தின் மாபெரும் விடுமுறை கொண்டாட்டம்

கடந்த டிசம்பர் மாதம் 6-ஆம் தேதி குறிஞ்சி முத்தமிழ் சங்கத்தால் நடத்தப்பட்ட விடுமுறை கொண்டாட்ட நிகழ்ச்சி, ஒரு முத்தமிழ் பெரு விழாவாக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை, கலை நிகழ்ச்சிகளில் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். இயல்,இசை,நாடகம் என்று முத்தமிழையும் மேடையில் கண்டு ,கேட்டு ரசிக்கும் ஒரு வாய்ப்பாக அமைந்தது.திருமதி.பபிதா , திருமதி.திவ்யா மற்றும் செல்வி.அதிதி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர்.












**தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவ வேண்டும்** என்று கனவு கண்டவர் நம் மகாகவி பாரதியார்.தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா இனிதே தொடங்கியது.

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடி - நம் தமிழினம். எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே என்பதற்கிணங்க உலகம் முழுவதும் தமிழர்களாகிய நாம் வாழ்ந்து வந்தாலும் நம் வேர்களை நம் கலாச்சாரத்தை , நம் கிளைகளாகிய அடுத்தடுத்த சந்ததியினருக்கு நினைவூட்டும் கடமை நமக்கு இருக்கிறது.தமிழ் மொழியை கற்கவும் அதை சார்ந்த செயல்பாடுகளுக்கும் ஆதாரங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது நம் குறிஞ்சி முத்தமிழ்ச்சங்கம் என்று தமிழர்கள் மற்றும் தமிழ் மொழியின் சிறப்பும் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கத்தின் நோக்கமும் வரவேற்புரையில் நினைவூட்டப்பட்டது.


திருமதி.திவ்யா வரவேற்புரை ஆற்றிய உடன், பாரம்பரிய நடனமான பரதநாட்டியம் முதல் நடனமாக அரங்கேறியது. வண்டு துளைத்த மூங்கிலுக்குள் தென்றல் புகுந்து வெளிவந்தது இசை என்பார்கள். அந்த ராகமாகிய இசைக்கு பாவமாகிய உணர்ச்சியை தந்து , தாளம் சேர்த்து ஆடும் நடனமே பரத நாட்டியம் ஆகும். ஊத்துக்காடு வேங்கட கவியின் (OVK) கல்யாண ராமா, நடேஷ கௌத்வம் என அழகான பக்திப் படைப்புகளும் பரதநாட்டியத்தின் மூலம் பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்தாக்கப்பட்டது. பாரம்பரிய நடனமும் பக்தியும் சேர்ந்து ஒரு ஆன்மிக அனுபவத்தை அனைவருக்கும் தந்தது.


சிறுவர் சிறுமியர் தமிழ் சினிமா பாடல்களை இசைக்கருவிகளில் வாசித்தனர்.புல்லாங்குழல், கீபோர்ட்,வயலின் மற்றும் கிட்டார் என்று பல்வேறு இசை கருவிகளாலும் தங்கள் இனிமையான குரல்களால் பாடியும் அசத்தினர்.

குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் நகைச்சுவை நாடகம் அனைவராலும் பெரிதும் பாராட்டப்பட்டது. நிறுவனர் மற்றும் தலைவரின் உரைக்குப் பின் , செல்வி.அதிதி நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவேறியது.



## வண்ணம் தீட்டி மகிழ்க






## விடுபட்ட இடங்களைத் தகுந்த குறில் , நெடில் வார்த்தைகளால் நிரப்புக:

| குறில் | நெடில் |
|---|---|
| | காடை |
| அவல் | |
| முடி | |
| | வானம் |
| நகம் | |
| | தாடி |
| மடி | |
| | கூண்டு |
| சதம் | |
| | நாரை |

## மீன்களை உரிய தொட்டியில் சேர்ப்பிக்க:



விழாதோரும் அழகை, உலா கொண்டுவரும் இன் கிரியேட் ஸ்டுடியோஸ் (Increate Studios) நிறுவனத்திற்கு நன்றி!

நிகழ்ச்சிகளில் புதுமை கொண்டுவரும், அழகிய புதுமைகள் பவித்ரா லக்ஷ்மி மனோகரன் மற்றும் ஸ்ருதி ராஜன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி!

# INCREATE STUDIOS

*EVENT PLANNING, DECOR AND DESIGNS*

At Increate Studios, we craft unforgettable experiences by blending tradition with modern aesthetics. Rooted in culture yet designed for today, our bespoke event decor transforms spaces into stories. With creativity at our core, we curate magic tailored just for you.



**Contact us**

9495298797

increate studios

increate_events

increatestudios@gmail.com